[9th November 1966

வந்திருக்கிறது. அதிகமாக நெல் சாகுபடி செய்யக் கூடிய இந்த ஏரியை தூர்வாரி, மராமத்து செய்ய நடவடிக்கை உடனடியாக எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏரியை தூர் வார வேண்டும் என்று பரிசிலனை செய்து வேலை செய்தது. இருந்தாலும், சில சமயங்களில் தண்ணீரை பூரா எடுத்து தூர் வார விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் தண்ணீர் இருக்கிறது. எப்படியும் ஓரளவாவது செய்யவேண்டும் என்றுதான் இயந்திரத்தை அனுப்பியது. ஆனால், சகதி காரணமாக அந்த வேலை தடைபட்டு விட்டது.

திரு. நா. இராசாங்கம்: தூர் வாராத காரணத்தால், விவசாயம் மட்டுமல்ல பாதிக்கப்பட்டது; மேற்கில் தண்ணீர் வருவது நிற்காமல் வெள்ளம் எடுத்து, சமீபத்தில் பெய்த மழைகாரணமாக கிட்டத்தட்ட 500 ஏக்கரா விளைச்சல் போய்விட்டது. அதுசம்பந்தமான புகார்கள் வந்து சர்க்காரும் சில மானியங்கள் ஒதுக்கியிருக்கிறது. இதை உத்தேசித்தாவது, தக்க நடவடிக்கை எடுத்து, தூர் வாரி வேலையை மறுபடியும் செய்ய சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கத்திற்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால், தண்ணீர் பூராவையும் விட்டுவிட விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள். ஆகவே எந்தெந்த இடங்களில் தூர் வார முடியுமோ அந்த இடங்களில் செய்யலாம். ஆனால், சகதியாக இருந்ததால், அந்த வேலை நடக்க முடியவில்லை. அது பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏரி எதுவாயினும் மண் எடுப்பதற்காக, சென்ற ஆண்டிலே எந்த எந்த பகுதிகள் தூர் வாரலாம் என்று ஒரு பட்டியலைக் கேட்டார்கள். அப்படி எழுதியும் அனுப்பப்பட்டது. ஆனால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன்: அப்பேர்ப்பட்ட பட்டியல் அனுப்பிய தகவல் என்னிடத்தில் இல்லை.

Agricultural development

* 551 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any technical assistance has been sought for from West Germany for establishing an Agricultural Development Project in Nilgiris district; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபைமுன் விவர அறிக்கை a ஒன்றுவைக்கப் பட்டுள்ளது.

a 897–898 பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th November 1966]

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதற்கான தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

மின் இறைவைப் பாசனம்

* 552 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மின் இறைவைப் பாசன திட்டம் எத்தனை போடப்பட்டது?

(இ) எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன? தாலூகா வாரியாக?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 17 (பதினேழு மட்டும்).

(இ) திருத்துறைப்பூண்டி வட்டத்தில் பரிசிலனை செய்யப்பட்ட 14 (பதினான்கு) மின் இறைவைப்பாசனத் திட்டங்களில், கீழ்க்கண்ட 7 (ஏழு) திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருகின்றன :—

(1) ஆய்மூர்.

(2) பாமணிமுள்ளியாறு.

(3) தேவம்பாள்பட்டினம்.

(4) முள்ளியாறுமின் இறைவைப்பாசனம்.

(5) ஆயக்காரம்பலம்.

(6) வளவனாறு.

(7) தென்நடாறு.

திரு. மா. தண்டாயுதபாணி : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், பாமணியாற்றில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இனியாவது துரிதமாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : பாமணிமுள்ளியாற்றுத் திட்டத்திற்கு 1,75,000 ரூபாய் செலவு செய்து, 217 ஏக்கர் நிலம் நன்மை அடைந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி : அரசாங்கம், தஞ்சை மாவட்டத்தில் இந்த மின் இறைவைப் பாசனத் திட்டம் எந்த எந்த இடங்களில், எத்தனை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை சர்வே செய்து முன்பே விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : Seventeen pumping schemes have been taken up under the Minor Irrigation Programme.